மாத்தறை மாநகர சபை - 2024
----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

மாத்தறை மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, மாத்தறை மாநகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும்

வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மாத்தறை பஸ் தரிப்பு நிலைய மேல் மாடியில் கடைத்தொகுதி நிர்மாணித்தல் மற்றும் பஸ் தரிப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக பெற்றுக்கொண்டிருந்து பின்னர் மாநகர சபைக்கு உரித்தாக்கியிருந்த ரூபா 37.9 மில்லியனிற்கான கடன் தொகை மற்றும் ரூபா 1.5 மில்லியனிற்கான வட்டி நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	பதிவு செய்யப்படாத கடன் மீதி, வருடாந்த வட்டி மற்றும் இதுவரை பதிவு செய்யப்படாத வட்டியும் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை மேற்கொண்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 06 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 9.3 மில்லியனிற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை.	பில்பத்திரங்கள் சமர்ப்பித்திருக்காத நிர்மாண வேலைகளுக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.	உடன்படிக்கை மேற்கொண்டு ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த நிர்மாண வேலைக்குரிய ரூபா 9.3 மில்லியன்

			தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ள வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் போது சபைக்கு 21 கணினி இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடு ரூபா 3.3 மில்லியன் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	அடுத்த வருட கணக்கின் மூலம் சரி செய்யப்படும் என.	மிகையாக காட்டப்பட்டிருந்த கடன்கொடுத்தோர் ஏற்பாடுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் போது ரூபா 1 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பிலேட் கம்பெக்டர் இயந்திரம் சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.	பதிலளிக்கப்படவில்லை.	இயந்திர உபகரணங்களில் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	சபைக்குச் சொந்தமான பொப்கெட் இயந்திரத்தின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்காததுடன், சாக்கடை பவுசரின் பெறுமதி ரூபா 1.8 மில்லியன் தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் மற்றும் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் சாக்கடை பவுசரின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து வித்தியாசத்தை சரி செய்யப்படும் என.	இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும்.
(ஊ)	அறிவித்தல் பலகை கட்டணம் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரி செய்வதற்கும் முறையான அங்கீகாரம் இன்றி நாட்குறிப்புப் பதிவொன்றின் மூலம் ரூபா 703,350 தொகையொன்று மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கிற்கு வரவு வைத்திருந்தமையால் அந்தக் கணக்கின் மீதி அந்தத் தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	முன்னைய ஆண்டுகளின் போது குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் செலவுகள் மேற்கொண்டு இவ்வாறு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என.	குறை நிரப்பு மதிப்பீடுசார் செலவுகள் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கிற்கு வரவு வைக்கப்படக்கூடாது.
(எ)	பணம் மாற்றல் கணக்கில் ஆரம்ப மீதியை சரி செய்வதற்காக நாட்குறிப்பொன்றின் மூலம் ரூபா 2.3 மில்லியனிற்கான தொகையொன்று மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கிற்கு வரவு வைத்தமையால் அந்தக் கணக்கின் அந்த எண்ணிக்கையால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2022 ஆண்டு ஊழியர் கடன்மீதி முத்திரைக் கட்டண பெறுவனவுகள் தீர்க்கப்பட்டமையால் பணம் மாற்றல் கணக்கிற்கு வரவு வைத்தலை சரி செய்வதற்காக இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	குறைவாக கணக்கீடு செய்யப்பட்ட தொகையினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டின் போது குறைநிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் மேலதிக	குறைநிரப்பு மதிப்பீட்டுக்குரிய செலவுகளுக்காக திரண்ட	பிழையான கணக்குப் பதிவுகள் 2025

ஏற்பாடுகள் பெற்றுக்கொண்ட போது, ஒத்த நிகழ்வாக நாட்குறிப்புப் பதிவின் மூலம் ரூபா 67.5 மில்லியன் தொகை மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மீளாய்வாண்டின் ஏனைய வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், இது சபையின் மேற்கொள்ளப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கணக்குப் பதிவொன்று என அவதானிக்கப்பட்டது.	நிதியத்தை பயன்படுத்தி நாட்குறிப்பின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டது என.	ஆண்டின் போது சரியாக சீராக்கல் மேற்கொள்ள வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 5.3 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.	2025 நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும் என.	வித்தியாசத்திற்கான காரணங்களை பரிசோதனை செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள், விரிவான அட்டவணைகள், விசாரனை அறிக்கைகள், பொலிஸ் அறிகைகள் ஆகிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 9.9 மில்லியன் தொகைக்கான 03 கணக்கு விடய மீதிகளை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை.	02 கணக்கு மீதிகளை பதிவழிப்பதற்காக ஆளுனருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் மற்றும் சபையின் வைப்புக் கணக்குத் தொடர்பாக அட்டவணைகள் 2025 நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் என.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் பிரமாணம் 571	மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு 02 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 6.7 மில்லியன் இற்கான 191 தடுத்துவைத்தல் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	02 வருடங்களை மிகைத்துள்ள 191 வைப்பு மீதிகளின் பெறுமதி அடுத்த வருடத்தில் கொடுப்பனவு செய்வதற்காக தடுத்து வைத்துக்கொள்ளப்பட வேண்டும் என.	02 வருடங்களை மிகைத்துள்ள வைப்பு மீதிகளை விரைவாக விடுவிக்க வேண்டியதுடன், அவ்வாறு இன்றேல் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் சபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 163.7 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 143.1 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

வருமான மூலம்	2024 மதிப்பீட்டு வருமானம்	2024 சிட்டையிடப்பட்ட வருமானம்	2024 சேகரிக்கப்பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	2023 மதிப்பீட்டு வருமானம்	2023 சிட்டையிடப்பட்ட வருமானம்	2023 சேகரிக்கப்பட்ட வருமானம	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i) வீதவரி மற்றும் வரி	91,617,628	88,370,228	65,536,231	84,225,917	36,775,793	43,920,938	49,573,197	61,391,920
(ii) வாடகை	53,985,500	49,666,983	43,696,488	90,501,180	30,939,750	37,538,384	43,587,093	84,530,685
(iii) அனுமதிப் பத்திரக் கட்டணம்	33,405,000	37,607,152	37,812,961	12,213,248	23,250,000	32,849,221	32,221,121	12,419,057
(iv) ஏனைய வருமானங்கள்	162,046,900	227,133,416	218,008,769	35,711,970	171,660,800	181,702,095	189,212,113	26,587,323
	341,055,028	402,777,779	365,054,449	222,652,315	262,626,343	296,010,638	314,593,524	184,928,985

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரி		
மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட வீதவரி மற்றும் வரி நிலுவை மீதியாகிய ரூபா 61.39 மில்லியன் மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 84.2 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அவற்றில் ரூபா 30.8 மில்லியன் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், ரூபா 100,000 தொகையை விட மிகையான நிலுவை வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17.2 மில்லியன் தொகையாகும்.	குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் சரியானவை என.	குறிப்பிட்ட கால சட்டகமொன்றினுள் நிலுவை வீதவரி மற்றும் வரி விரைவாக அறவிடப்பட வேண்டும்.

(ஆ) கடை வாடகை

(i)	மாநகர சபைக்குச் சொந்தமான 655 கடையறைகளில் 603 கடைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 479 கடையறைகளுக்காக 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை கடையறை வாடகை ரூபா 79.7 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அவற்றில் 161 கடையறைகளில் இருந்து 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற நிலுவை ரூபா 17.4 மில்லியன் தொகையாக காணப்பட்ட போதிலும், நிலுவை கடை வாடகையை அறவீடு செய்வதற்கு அல்லது திருப்ப உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நீண்ட காலம் முதல் கடை வாடகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிட்ட கால சட்டகத்தினுள் நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டியதுடன், அவ்வாறன்றேல், உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 05 இன் படி உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டிய போதிலும், மாத்தறை மாநகர சபைக்கு சொந்தமான 130 கடையறைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கைகள் 09 மாதங்கள் முதல் 92 வருடங்கள் வரையான கால வரையறையுடன் நாளதுவரை ஆக்கியிருக்காததுடன், 05 கடையறைகளை உடன்படிக்கைகள் மேற்கொள்ளாமல் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.	நிதிக் குழுவின் தீர்மானத்தை பெற்றுக்கொண்டு அந்தக் கடையறைகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதெனவும், உடன்படிக்கை மேற்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடையறைகளுக்காக புதிய வாடகை உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், அந்த உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும்.
(iii)	05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை புதிய மதிப்பீடொன்றின் மூலம் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கொடுவேகொடவில் 33 கடையறைகள் 04 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.	இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்ட போதிலும், பதில் அனுப்பப்படாத கடைகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என.	குறிப்பிட்ட காலப் பகுதியில் பெறுமதி மதிப்பீடு மேற்கொண்டு கடை வாடகை தொடர்பாக உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(iv)	வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவு சங்கத்தினால் பெற்றுக்கொண்டிருந்த கடையறை தொடர்பாக 2019 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி வாடகை அறவீடு செய்யாமையால் மாநகர சபை நிதியத்திற்கு ரூபா 1.7 மில்லியன் தொகைக்கான வருமானங்கள் இழந்திருந்தது.	புதிய பெறுமதி மேற்கொண்டு அந்த மதிப்பீட்டுத் தொகை எதுவாக இருந்தாலும், ஆரம்ப மதிப்பீடு கிடைத்த நாள் முதல் நிலுவை தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறிப்பிட்ட கால சட்டகத்தினுள் நிலுவைத் தொகை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(v)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 71 கடையறைகள் தொடர்பாக ஒரே தடவையில் செலுத்தும் பணம் ரூபா 16.3 மில்லியன் தொகை நிலுவையாக காணப்பட்டது.	2025 மே 31 திகதி அளவில் ரூபா 1.22 மில்லியன் ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவீடு செய்யப்பட்டது என.	குறிப்பிட்ட கால சட்டகத்தினுள் நிலுவை ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவீடு செய்யப்பட வேண்டியதுடன், அவ்வாறின்றேல் உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**நிர்மாணிக்கப்பட்டிருந்த அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமை.**		
(i)	நகர அபிவிருத்தி அதிகார சபைத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள் / பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 28(1) பிரிவுக்கு முரணாக மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 07 இடங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 07	அங்கீகாரமற்றவை என அறிவிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதுடன், தொடர் செயற்பாடுகளுக்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறிப்பிட்ட கால சட்டகத்தினுள் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை முறைப்படுத்த முடியும் எனின், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறின்றேல் அவற்றை அகற்றுவதற்கு

கட்டிடங்கள் மற்றும் 02 எல்லை மதில்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.		நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) மாத்தறை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கான 2010 – 2030 அபிவிருத்தித் திட்டத்தின் திட்டங்கள் மற்றும் கட்டிட பிரமாணங்கள் அடங்கிய ii ஆவது பிரிவேட்டின் v ஆவது அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்த 7 கட்டிடங்களுக்காக ரூபா 2.7 மில்லியனிற்கான கட்டணம் ஒன்று அறவீடு செய்து நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு அல்லது அது தொடர்பாக சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவிலலை.	அங்கிகாரமற்றவைகளுக்கான இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதுடன், தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறிப்பிட்ட கால சட்டகத்தினுள் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை முறைப்படுத்த முடியும் எனின், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறின்றேல் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ) சபையினால் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளின் மூலம் உயிர் வாயு உற்பத்தி செய்து அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்றுக்காக மாநகர சபை மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் தனியார் கம்பனி ஒன்றிற்கிடையே முத்தரப்பு உடன்படிக்கையொன்று 2014 ஆண்டின் போது அணுகியிருந்ததுடன், கொடவில பிரதேசத்தில் அமைந்துள்ள சேதனப் பசளை உற்பத்தி செய்யும் நிலப் பகுதியில் 05 ஏக்கர் அந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. 06 மாத காலத்தினுள் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும், செயற்திட்டம் பூர்த்தி செய்திருக்காததுடன், சேதனப் பசளை உற்பத்தியும் முடிவுறாத காரணமாக சேதனப் பசளை உற்பத்தி இயந்திரம் விளைவற்று துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது.	இந்த செயற்திட்டம் தொடர்பாக இதனை தொடர்புடைய அனைத்து நிறுவனங்களுடனும் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் படி இந்த செயற்திட்டத்தை முடிவுறுத்தி புதிய திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்றிற்காக சாலிமொவுண்ட் தோட்டத்தில் புதிய செயற்திட்டம் ஆரம்பிக்கும் வரை நகர சபையினால் இந்த இடத்தில் குப்பை முகாமைத்துவம் செய்யப்படுகின்றது என.	புதிய குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செயற்படுத்த வேண்டியதுடன், அதுவரை தற்போது குப்பை முகாமைத்துவம் செய்யும் கொடவில செயற்கலத்தில் முறைப் பிரகாரம் குப்பை முகாமைத்துவ செய்முறையொன்று விரைவாக செயற்படுத்த வேண்டும்.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உரித்தாக்கப்படாத சொத்துக்கள் சபைக்குச் சொந்தமான காணப்படும் சுமார் 43 ஏக்கர் கொண்ட 38 காணிகள் தொடர்பாக எண்ணிக்கை அறுதியாக குறிப்பிடப்படாத 41 காணித் துண்டுகள் தொடர்பாக சட்டரீதியான உரிமையை சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அளவினை அறுதியாக குறிப்பிட்டிருக்காத 41 காணித் துண்டுகள் தொடர்பாக விபரம் ஒன்று உள்ளடங்கியுள்ளதா என வெவ்வேறாக இனங்காண முடியாதுள்ளது என.	சபைக்குச் சொந்தமான காணிகள் அறுதியாக இனங்கண்டு குறிப்பிட்ட காணிகளின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சனத் ஜயசூரிய விளையாட்டுத் திடலில் விளையாட்டு பார்வை மண்டபத்தின் கூரை துருப்பிடித்து இருந்ததுடன், விளையாட்டுத் திடலின் பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த வலை வேலிகள் துருப்பிடித்து சில இடங்களில் உடைந்திருந்தது. அதேபோல், விளையாட்டுத் திடலின் கழிவறை முறைமை மிகவும் சுத்தமற்ற நிலையில் காணப்பட்ட போதிலும், அது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	விளையாட்டுப் பார்வை மண்டபத்தின் கூரையை சரி செய்வதற்காக மாவட்ட கிரிகட் சங்கத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும், கழிவறை முறைமையை சுத்தம் செய்தல் அலுவல்களின் மேற்பார்வைக்கு விளையாட்டுத் திடல் பொறுப்பாக உள்ள முகாரிக்கு எழுத்துமூலமாக சாட்டப்பட்டுள்ளது என.	நிச்சயிக்கப்பட்ட கால சட்டகத்தினுள் விளையாட்டு பார்வை மண்டபம் மற்றும் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட வேண்டும். கழிவறை முறைமையை சுத்தம் செய்தல் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

3.3 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
ஆளனித் திட்டத்தின் படி மீளாய்வாண்டு இறுதி அளவில் 62 பதவிகள் மிகையாக காணப்பட்டது.	உள்ளூராட்சி ஆணையாளருக்கு பதவிகளை அங்கீகரிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது என.	பதவியணி தேவைப்பாடு தொடர்பாக மீளாய்வு செய்து அதன்படி, பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.